முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு - 2024

**பேச்சுப் போட்டி: வகுப்பு - 08 (2010-இல் பிறந்தோர்)**

# தொல்காப்பியத்தில் அறிவியல்

தொல்காப்பியம், தமிழரின் முதல் அடையாளம், தமிழ்மொழிக்குக் காப்பு என்று கூறினாலும் மிகையாகாது. தமிழரின் பண்டைய வாழ்வியல் தொடர்பான ஆவணமும் ஆகும். தொல்காப்பியத்தில் மானுடவியல் சார்ந்த தமிழினப் பண்பாட்டு வளர்ச்சி பற்றிய வரலாற்றுப் பதிவுகளும் உள்ளன. தொல்காப்பியர், தம் காலத்திற்கு அப்பால் சென்று, தொலை நோக்கில், தமிழ் இனம் எவ்வாறு வாழ வேண்டும் என வழிவகுக்கும் இடங்களும் உள.

தொல்காப்பியத்திற்கு முன்னமேயே பல இலக்கண, இலக்கிய நூல்கள் இருந்து காலத்தால் அழிந்து போயின. தொல்காப்பியத்தின் காலம், பொது ஆண்டுக்கு முன் 711 ஆம் ஆண்டாகும். இற்றைக்கு 2700 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட இந் நூலில் காணப்படும் அறிவியல் கூறுகளை இன்றைய அறிவியல் சிந்தனைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது அது எம்மை வியக்க வைக்கிறது.

தொல்காப்பியத்தில், **ஒலியியல், ஒலியனியல், மண்ணியல், தாவரவியல், விண்ணியல், அளவியல், பொருளியல், சமூகவியல், அரசியல்** எனப் பல்வேறுபட்ட துறைகளிலும் அறிவியல் கருத்துக்கள் வேரூன்றியிருக்கின்றன என அறிஞர் நிரூபித்துள்ளனர்.

அறிவியலின் தந்தை என்று கூறப்படும், **கிரேக்க தத்துவஞானியான அரிஸ்டோட்டில்**, உலகமும் அதன் உடமைகளும் **நிலம், தீ, நீர், வளி என்ற நான்கு மூலங்களினால்** ஆனது என்று பொது ஆண்டுக்கு முன் 5 ஆம் நூற்றாண்டில் கூறினார். இதையே **தொல்காப்பியர் பொது ஆண்டுக்கு முன் 711 ஆம் ஆண்டில்**, தொல்காப்பியம், பொருளதிகாரத்தில்,

*"நிலம்தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்*
*கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"*

என்னும் 635 ஆம் நூற்பாவால் அறியத் தருக்கிறார். "நிலம், தீ, நீர், வளி, விசும்பு ஆகிய ஐந்து மூலங்களின் சேர்க்கையினால் ஆனது உலகு" என்று கூறினார். இது வியப்புத் தரும் அறிவியல் செய்தி அல்லவா?

தொல்காப்பியத்தில் அறிவியல் சார்ந்து முன்னணியில் நிற்பது **ஒலிகளின் பிறப்பாகும்** தொல்காப்பியர், எழுத்ததிகாரம், "பிறப்பியல்" என்னும் பகுதியில் **ஒலிகள் பிறக்கும் இடம் பற்றிய**

**பொது இலக்கணம்** கூறுகிறார். **தொல்காப்பியர் கூறியிருக்கும் பிறப்புப் பற்றிய இலக்கணத்தை, இன்றைய மொழியியலார் வியந்து போற்றுகிறார்கள்.** இன்றைய விஞ்ஞான வளர்ச்சியின் அடிப்படையில், ஒலிகளின் பிறப்பை ஆராய்ந்து பார்க்கும்போது, 2700 ஆண்டுகளுக்கு முன் பிறப்பியலில் தொல்காப்பியர் சொன்ன கருத்துக்கள் பெரும்பாலும் ஒத்து வருகின்றன. இதனை,

*"உந்தி முதலா முந்து வளி தோன்றி,*
*தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ*
*பல்லும் இதழும் நாவும் மூக்கும்*
*அண்ணமும் உளப்பட . . ."*

என்னும் தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம்.

**உயிரினப் பகுப்புமுறை** பற்றிய தொல்காப்பிய நூற்பா, அக்கால அறிஞர்களிடையே நிலவிய உயிரினங்கள் பற்றிய அறிவியல் சார்ந்த கருத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.

*"**ஒன்றறிவதுவே** உற்றறிவதுவே*
***இரண்டறிவது**வே அதனொடு நாவே*
***மூன்றறிவதுவே** அவற்றொடு மூக்கே*
***நான்கறிவதுவே** அவற்றொடு கண்ணே*
***ஐந்தறிவதுவே** அவற்றொடு செவியே*
***ஆறறிவதுவே** அவற்றொடு மனனே*
*நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே"*

**ஓரறிவுள்ள உயிர்கள்** உடம்பினால் வெப்பம், தட்பம், வன்மை மென்மையை அறிகின்றன. **ஈரறிவுள்ள உயிர்கள்**, இவற்றுடன், நாவினால் சுவைகளை அறிகின்றன. **மூவறிவுள்ள உயிர்கள்**, இவற்றுடன் மூக்கினால் பல்வேறு நாற்றங்களையும் அறிகின்றன. **நான்கறிவுள்ள உயிர்கள்**, இவற்றுடன் கண்ணினால் அனைத்தையும் காணவும் செய்கின்றன. **ஐயறிவுள்ள உயிர்கள்**, இவற்றுடன் காதினால் கேட்கவும் செய்கின்றன. **ஆறறிவுடைய உயிர்கள்** இவற்றுடன் பகுத்தறிவையும் பெறுகின்றன என்று கூறுகிறது இந் நூற்பா.

**நிலத்தினதும் பொழுதினதும் இயல்பு முதலாகும்**. நிலமாகிய வெளியினையும், பொழுதாகிய காலத்தையும் ஒன்றாக்கி முதலாகக் கொண்டார். நிலம் பொழுது பற்றிய தொல்காப்பிய நூற்பா வருமாறு,

*"முதல் எனப் படுவது நிலம் பொழுது இரண்டின்*
*இயல்பென மொழிப இயல்பு உணர்ந்தோரே"*

பெரும்பொழுது என்பது ஆண்டின் ஒரு கூறாகும். ஒவ்வொரு பெரும்பொழுதும் இரண்டு மாத கால அளவுடையது. அவை, கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என ஆறு காலங்களாகும்.

இவ்வாறு, தொல்காப்பியத்தில் கூறப்பட்டிருக்கும் அறிவியல் கூறுகளை ஆராய்ந்து எம் முன்னோரின் அறிவியல் திறமைகளை அறிந்து கொள்வோம். அவற்றை உலகம் அறிய உரக்கச் சொல்வோம்.

வாழ்க தமிழ்! நன்றி, வணக்கம்.